[17th March 1959

நம் மில்களிலிருந்து தான் போவதால் எத்தனைபோகிறது என்று உணர்ந்து கொள்ளலாம். நம் மில்களிலிருந்து அரிசியை நாமும் ஓரளவு வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது.

SRI K. RAMACHANDRAN : ஸார், உபரி ஜில்லாக்களில் கொள்முதல் செய்வதுடன் கூட பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள் முதல் செய்வதால் அந்தப் பிரதேசங்களில் விலை ஏறிக்கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், பற்றுக்குறை பிரதேசங்களில் கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கு உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே கூறியது போல, நாம் இப்போது கொள்முதல் செய்வது, நாம் நிர்ணயித்திருக்கிற விலைப்படி மற்ற இடங்களில் விற்கவேண்டும் என்பதற்காக, உபரி ஜில்லாக்களிலும், பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள்முதல் செய்தால் தான் அதைப் பிரயோகிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

SRI S. LAZAR : ஸார், ப்ரொக்யூர்மெண்ட் ஆர்டர் அமுலுக்கு வந்த பிறகு சென்ற ஒரு வார காலமாக திருச்சி போன்ற இடங்களில் மார்க்கெட்டில் அரிசி கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? ஒரு ஜில்லாவிலிருந்து மற்ற ஜில்லாக்களுக்குப் போகக்கூடாது என்ற உத்தரவை எடுத்துவிட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஏற்பாடுகளை எதிர்த்து வருகிறது வியாபாரிகளுடைய கிளர்ச்சி. இதெல்லாம் வியாபாரிகள் சொல்லுகிற அபிப்பிராயங்கள்.

SRI A. A. RASHEED : May I know whether rice is procured only in surplus districts or in other districts also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rice is procured in all the districts, Sir.

Visits to Block offices by the Minister for Electricity

* 832 *Q.*—SRI T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the defects noticed by the Hon. the Minister for Electricity when he visited the Alangulam Block office during August last year; and

(*b*) the steps taken to rectify the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A blockwise list of defects noticed by the Minister for Electricity has not been recorded. The Minister has gathered certain general impressions of the working of the Community Development Programme and the measures necessary for toning up the tempo of work. They are under examination by the Government.

* 833 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல்மைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்ற 1958-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் மின்சார அமைச்சரவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் சமுதாய நலத் திட்டங்கள், தேசீய அபிவிருத்தி திட்டங்களின் அலுவலகங்களின் தஸ்தவேஜிகளைப் பார்வையிட்டாரா ?

(ஆ) எந்தெந்த அலுவலகங்கள் அவரால் பார்வையிடப்பட்டன ?